# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.07.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண்கள். SA 15728/SCIC/2022, SA 12063/SCIC/2022, CP 315/SCIC/2022, CP 2320/SCIC/2022, CP 2340/SCIC/2022, CP 2586/SCIC/2022, CP 2958/SCIC/2022, CP 2587/SCIC/2022, CP 2588/SCIC/2022, CP 2364/SCIC/2022, CP 2338/SCIC/2022, CP 2339/SCIC/2022 & CP 3076/SCIC/2022

திரு.D.கலியபெருமாள். த/பெ.தனுக்கோடி
பரங்கி வெட்டிக்காடு போஸ்ட்
54, ஆம்பலாபட்டு
ஒரத்தநாடு வட்டம்
தஞ்சாவூர் மாவட்டம் - 614 626.

மேல்முறையீட்டாளர்

/எதிர்/

1.பொது தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர் மாவட்டம்.

.... பொது அதிகார அமைப்பு

2.பொது தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர் மாவட்டம்.

<u>**ஆணை**</u>

1. இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 19/11/2024 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது,

*"4. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மேற்குறிப்பிட்ட (1) SA 15728/SCIC/2022, (2) CP 315/SCIC/2022 (3) CP 2364/SCIC/2022 (4) CP 2587/SCIC/2022 (5) CP 2588/SCIC/2022 6) CP 2958/SCIC/2022 (7)CP 2586/SCIC/2022 (8) CP 2340/SCIC/2022 & (9) CP 2320/SCIC/2022 ஆகிய ஒன்பது வழக்குகளும் ஒரே பொருண்மை கொண்டதாக உள்ளது என்பதைக் காண முடிகிறது. அதனை மனுதாரரும் ஏற்றுக் கொண்டார். எனவே, இவையனைத்தையும் ஒருங்கியலாக விசாரணை செய்ய ஆணையம் முடிவு செய்து, இவையனைத்திற்கும் பொதுவான ஆணை பிறப்பிக்கவும் முடிவு செய்தது.*

*இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.திருமால், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்)/ பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், ஒரத்தநாடு உரிமையியல் நீதிமன்றம் O.S.No.82/2004 என்ற வழக்கில் 03/03/2008 அன்று அளித்த தீர்ப்பில் மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மற்றும் வட்டாட்சியர், தஞ்சாவூர் அவர்களை மனுதாரருக்கு பட்டா வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. மேற்குறிப்பிட்ட ஆணையை அமல்படுத்தாத காரணத்தினால், சென்னை உயர்நீதிமன்றக் கிளை, மதுரையில் மனுதாரர் நீதிப்பேராணையினை தாக்கல் செய்ததன்பேரில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை 16/09/2016 தேதியிட்டு ஓர் ஆணை பிறப்பித்துள்ளது. மேற்குறிப்பிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை பிறப்பித்த ஆணையின் அடிப்படையில் மனுதாரருக்கு வட்டாட்சியர், தஞ்சாவூர் அவர்களால் 28/10/2016 தேதியிட்ட நடவடிக்கையின் வாயிலாக பட்டா வழங்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் ஆணை மற்றும் பட்டா ஆகியவற்றின் நகல்களை மனுதாரர் ஆணையத்தின் முன்பாக சமர்ப்பித்தார்.*

*மனுதாரரின் முதன்மையான கோரிக்கையாக தற்போது இருப்பது, பட்டா வழங்கப்பட்டிருந்தாலும், சம்பந்தப்பட்ட வருவாய் பதிவேடுகளில் (சிட்டா மற்றும் அடங்கல்) உரிய பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், , அதற்காக, தான் நீண்ட காலமாக முயற்சி எடுத்து வருவதாகவும், அதனையொட்டியே தான் 14/02/2022 தேதியிட்டு மனு சமர்ப்பித்துள்ளதாகவும், அம்மனு மீது எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கையினை தனக்கு வழங்க வேண்டுமென்றும் என்பதுதான் எனத் தெரிவித்தார்.*

*மேற்குறிப்பிட்டவாறு மனுதாரருக்கு, பட்டா வழங்கப்பட்ட நிலமானது, நீர்வழிப் புறம்போக்குக்கு உரியது என்றும், குறிப்பிட்ட அந்நிலத்திற்கு பட்டா வழங்கியிருக்கக் கூடாது என்றும், அவ்வாறு பட்டா வழங்கிய வட்டாட்சியர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், மேற்குறிப்பிட்ட 16/09/2016 தேதியிட்டு பட்டா வழங்க உத்தரவு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் மீது, மேல்முறையீடு செய்யவும், மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளதாக, விசாரணைக்கு ஆஜரான மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மற்றும் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) ஆகியோர் தெரிவித்தனர். ஆனால் இதுவரை அவ்வாறான மேல்முறையீட்டு மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.*

*மேற்குறிப்பிட்ட கோப்புகளைப் பரிசீலனை செய்கையில் மதுரை உயர்நீதிமன்றக் கிளையின் உத்தரவின் அடிப்படையிலும், அரசு வழக்கறிஞர், ஒரத்தநாடு அவர்களின் 25/10/2016 தேதியிட்ட சட்ட கருத்துரையின் அடிப்படையிலும்தான் மனுதாரருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.*

*எனவே, இத்தகைய சூழ்நிலையில், பொது அதிகார அமைப்பின் கூற்றினை ஆணையம் ஏற்கவில்லை.*

*எனவே, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள் இவ்வழக்கு குறித்த அனைத்து தரவுகளையும், குறிப்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் பிறப்பித்த உத்தரவு அதன் பின்னர் அரசு வழக்கறிஞர் வழங்கிய சட்டக் கருத்து அதனைத் தொடர்ந்து வருவாய் கோட்டாட்சியருக்கு நிலத்தை வகைப்படுத்தத் தெரிவித்தது, பின்பு மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அந்நிலத்தை நீர்வழிப் புறம்போக்கு என்பதால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் ஆணையின் மீது மேல்முறையீடு தாக்கல் செய்ய அறிவுறுத்தியது மற்றும் இதுவரை மேல்முறையீடு தாக்கல் செய்யப்படாத நிலை போன்றவற்றின் மீது உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. கடந்த 8 வருட காலமாக இக்கோப்பின் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்த அலுவலர்கள் யார் ? யார் ? அதற்கான காரணம் என்ன ? என்பது பற்றியும் விசாரணை மேற்கொண்டு, இவ்வாணை கிடைக்கப் பெற்ற மூன்று மாத காலத்திற்குள் ஆணையத்திற்கு அவ்விசாரணை அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தஞ்சாவூர் மாவட்டம் அவர்களுக்கு ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.*

*இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் 8 (எட்டு) புகார் மனுக்களும் ஒரே பொருண்மை கொண்டது என்று தெரிவித்தார். தன்னுடைய முக்கிய கோரிக்கைக்கு தீர்வு காணப்பட்டு, தனக்கு உரிய பதில் பெற்றுத்தர முறையிட்டதன் அடிப்படையில் இந்த ஒரு இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் 8 புகார் மனுக்களுக்கும் பொதுவான ஆணை பிறப்பிக்கப்படுகிறது.*

*இவ்வழக்கின் விசாரணை மூன்று மாதத்திற்கு ஒத்தி வைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த பின்னர் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.*

2. மேற்குறிப்பிட்டவாறு இன்று (18/03/2025) ஆணையம் இவ்வழக்குளை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.திருமால், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) மற்றும் திரு.G.இளங்கோ, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், தஞ்சாவூர் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள். இன்றைய விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட மேலும் 4 (நான்கு) வழக்குகளும் (SA 12063/SCIC/2022, CP 2338/SCIC/2022, CP 339/SCIC/2022 மற்றும் CP 3076/SCIC/2022) இதே பொருண்மை கொண்டதுதான் என்று மனுதாரர் தெரிவித்ததன் பேரில் அந்த 4 வழக்குகளும் சேர்த்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

3. மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் 17/03/2025 தேதியிட்ட அறிக்கையோடு 14/03/2025 தேதியிட்ட தனது அறிக்கையினையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அவ்வறிக்கையில், உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவினை பிறப்பித்திருந்ததால், மேல்முறையீடு தாக்கல் செய்ய இயலாது என்று அரசு வழக்கறிஞர் தெரிவித்ததாகவும், இருப்பினும் ஆணையம் விவரம் கோரியிருந்த நிலையில், ஒரத்தநாடு உரிமையியல் நீதிமன்றம் ஆணையிட்டவாறு மனுதாரருக்கு பட்டா வழங்கப்பட்டிருந்தாலும், குறிப்பிட்ட அந்த நிலம் நீர் வழிப் புறம்போக்கு என்பதால் அந்த நிலத்திற்கு பட்டா வழங்க இயலாது என்ற சூழ்நிலையில் மேற்சொன்ன WP (MD) No.17443-2016 நீதிப்பேராணையினை தள்ளுபடி செய்வதற்காக ஒரத்தநாடு வட்டாட்சியரால் எதிர் வாதுரை தயார் செய்யப்பட்டு 30/01/2025 அன்று அரசு வழக்கறிஞரிடம் தாக்கல் செய்யப்பட்டு, அதன்

பின்னர் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். எனினும் அதற்கான வழக்கு எண். இன்னமும் வழங்கப் பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

4. இந்த நிலையில், ஆணையம், இது தொடர்பாக எவ்வித உத்தரவினையும் மாவட்ட ஆட்சியருக்கு வழங்க இயலாது. மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) இன்றைய விசாரணையின்போது அரசு வழக்கறிஞர் வாயிலாக மேல்முறையீடு தாக்கல் செய்து இருப்பதாகவும், எனினும் வழக்கிற்கான எண் வழங்கப்படாமையால் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்தார். எனவே, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் வழக்கிற்கான எண்ணைப் பெற அறிவுறுத்துவதோடு, அவ்வாறு எண் வழங்கப்பட்டதும், அதனை 08/04/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

5. ஆணையம் 19/11/2024 தேதியிட்டு ஆணை பிறப்பித்துள்ளதில், கடந்த 8 வருட காலமாக இக்கோப்பின் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்த அலுவலர்கள் யார் ? யார் ? அதற்கான காரணம் என்ன ? என்பது பற்றியும் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தியிருந்தது. ஆனால் அதுகுறித்து எவ்வித அறிக்கையினையும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களால் இன்று ஆணையத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

6. எனவே, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள் மேற்குறிப்பிட்ட 8 வருட காலதாமதத்திற்கு காரணமானவர்கள் மீது விசாரணை நடத்தி அதற்கான அறிக்கையினை ஆணையத்தில் 08/04/2025 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

7. மேலும், இணைய தள வழியிலான பட்டா வழங்குவது பொறுத்த வரையில், மனுதாரர் துறையின் உயர்அதிகாரிகளை அணுகியோ, நீதிமன்றத்தின் வாயிலாகவோ தனது கோரிக்கைகளுக்கு தீர்வு கண்டுகொள்ளுமாறு ஆணையம் மனுதாரருக்கு அறிவுறுத்துகிறது.

8. மேலும், புதிய வழக்குகள், அதாவது CP 2338/SCIC/2022, CP 2339/SCIC/2022 & SA12063/2022 ஆகிய மூன்று வழக்குகளும் மேற்சொன்ன பொருண்மை கொண்டது என மனுதாரர் தெரிவித்தார். எனவே, இம்மூன்று வழக்குகளும் மேற்குறிப்பிட்ட வழக்குகளுடன் இணைத்து, பொதுவான ஆணை பிறப்பிக்கப்படுகிறது. மேலும் CP 3076/SCIC/2022 என்ற புகார் மனு ஆணையத்தின் அறிவிப்பின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அப்புகார் மனு நிலைக்கத்தக்கதல்ல என்று ஆணையம் கருதி, தள்ளுபடி செய்கிறது.

மேற்குறிப்பிட்டவாறு, 08/04/2025-க்குப் பதிலாக, இன்று (23/05/2025) ஆணையத்தின் முன் பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.செல்வகுமார், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தஞ்சாவூர் வட்டம் (ம) மாவட்டம் அவர்கள் ஆஜராகி ஆணையத்தின் 18/03/2025 தேதியிட்ட விசாரணை அறிக்கையினை தாக்கல் செய்ய மேலும் கால அவகாசம் கோரினார். இறுதி வாய்ப்பாக மேலும் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படுகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (பொது), தஞ்சாவூர் மாவட்டம் அவர்கள், ஆணையம் உத்தரவிட்டவாறான விசாரணை அறிக்கையோடு, உரிய விவரங்களை இணைத்து ஆணையத்தில் 03/07/2025 அன்று பிற்பகல் தவறாமல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவிடுகிறது.

மேற்குறிப்பிட்டவாறு, இன்று (03/07/2025) ஆணையத்தின் முன் பொது அதிகார அமைப்பின் சார்பில். பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.R. செல்வகுமார், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தஞ்சாவூர் வட்டம் (ம) மாவட்டம் அவர்கள் ஆஜராகி, ஏற்கனவே ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு, 02/07/2025 தேதியிட்ட அறிக்கையினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அந்த அறிக்கையில், 8 வருட காலமாக இக்கோப்பின் மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்த அலுவலர்களின் எண்ணிக்கை மொத்தம் 10 பேர் என்றும், அதில் ஒரு அலுவலர் காலமாகிவிட்டார் என்றும் மீதம் 9 அலுவலர்களுக்கு விசாரணை அறிவிப்பினை அனுப்பி 30/06/2025 அன்று நேரில் ஆஜராகி விளக்கம் சமர்ப்பிக்க வேண்டுமென்று கோரப்பட்டிருந்தது என்றும் அதில் 7 அலுவலர்கள் 30/06/2025 தேதிய விசாரணையில் பங்கேற்று, விளக்கங்களை சமர்ப்பித்தனர் என்றும் மற்ற இருவரின் மீதான விசாரணை நிலுவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இது குறித்து பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவிக்கையில் அரசு வழக்கறிஞர், நீதிமன்றத்தில், மேல்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்வதாக அறிக்கை ஒன்றினை அளித்திருப்பதாகவும் குறிப்பிட்டார். மேற்குறிப்பிட்ட 02/07/2025 தேதியிட்ட அறிக்கையினை ஆணையம் பரிசீலனை செய்து, அதனை ஏற்கிறது. எனவே, இத்துடன், இவ்வழக்குகளின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**வழக்கு எண்கள். SA 15728/SCIC/2022, SA 12063/SCIC/2022, CP 315/SCIC/2022, CP 2320/SCIC/2022, CP 2340/SCIC/2022, CP 2586/SCIC/2022, CP 2958/SCIC/2022, CP 2587/SCIC/2022, CP 2588/SCIC/2022, CP 2364/SCIC/2022, CP 2338/SCIC/2022, CP 2339/SCIC/2022 & CP 3076/SCIC/2022**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.பொது தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர் மாவட்டம்.

2.பொது தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
தஞ்சாவூர் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.D.கலியபெருமாள். த/பெ.தனுக்கோடி
பரங்கி வெட்டிக்காடு போஸ்ட்
54, ஆம்பலாபட்டு
ஒரத்தநாடு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் - 614 626.

RG/PC